வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை,நவம்பர்-2017
## Term Examination, November - 2017

| சித்திரக்கலை | தரம் :- 12 (2019) | புள்ளித்திட்டங்கள் |
|---|---|---|

**சித்திரக்கலைபுள்ளித்திட்டம் - 12(2019)**

வினாப்பத்திரம் (சித்திரக்கலைI) - 100 புள்ளிகள்

(சித்திரக்கலைII) - 100 புள்ளிகள்

(சித்திரக்கலைIII) - 100 புள்ளிகள்

மொத்தம் 300 புள்ளிகள்

இறுதிப்புள்ளி = 300 ÷ 3

= 100 புள்ளிகள்

The National e-learning Portal for The General Education

**பகுதிIக்கானவிடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 3 | 21)4 | 31) 2 |
| 2) 4 | 12) 2 | 22)5 | 32)5 |
| 3) 3 | 13)5 | 23) 1 | 33)1 |
| 4) 3 | 14) 1 | 24) 2 | 34) 2 |
| 5) 3 | 15) 2 | 25) 2 | 35) 5 |
| 6) 2 | 16) 5 | 26) 5 | 36) 2 |
| 7) 2 | 17) 2 | 27) 3 | 37) 1 |
| 8) 3 | 18) 4 | 28) 5 | 38) 2 |
| 9) 2 | 19) 3 | 29) 5 | 39) 2 |
| 10) 3 | 20) 4 | 30) 1 | 40) 3 |

**(40 x 1 = 40புள்ளிகள்)**

**வினா 1**

1. நடனமாது (சந்திரலேகா), சீத்தாட்டி சேரமின் (4 புள்ளிகள்)
2.
   - உயிரோட்டத்தையும், மேனிஅழகையும் நன்கு வெளிப்படுத்தும் வகையில் மனித உருவங்களைச் சித்தரித்தல்.
   - மனித மெய்நிலைகள், உணர்வுகளை வெளிப்படுத்தலும் காத்திரதத் தன்மையைக் கொண்டிருத்தலும்.
   - முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு பிரகாசமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.
   - கிறிஸ்தவக் கருப்பொருள்களைச் சித்தரிக்கும் போது ஐரோப்பியப் பண்பாடும் நிலவுருவில் இலங்கைப் பின்னணியும் சித்தரிக்கப்பட்டிருத்தல். (6 புள்ளிகள்)
3.
   - கன்வசுத்தளத்தில் எண்ணெய் (தைல) வர்ணத்தினால் சித்தரிக்கப்படடுள்ள ''தச்சனின் வீடு'' எனும் இந்த ஓவியம் கொழும்பு, தேசிய கலாபவனத்தில் காட்சிக்குவைக்கப்பட் டுள்ளது.
   - தச்சனின் வீட்டில் நிலவும் வறுமை நிலையைக் காட்டுவதற்காக மிகச் சிறப்பாக மனித உருவங்களும் வர்ணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
   - யன்னலின் ஊடாக வீட்டினுள் புகும் ஒளிமிக இயல்பான வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவ்வொளியின் மூலம் தச்சனது வீட்டாரின் முகங்களில் தோன்றும் உணர்வுகள் மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.
   - நிறங்கள் 'கியரஸ்கியுரோ' (Chiaroscuro) கோட்பாட்டின் படிமுப்பரிமாண இயல்புகளுடன் காட்டப்பட்டுள்ளது.
   - தச்சனின் வீட்டில் நிலவும் வறுமை நிலையைக் காட்டுவதற்காக மிகச் சிறப்பாக மனித உருவங்களும் வர்ணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
   - படைப்பாக்க வெளியின் மீது, ஆழத்தைக் காட்டியவாறு, தூரநோக்கு இயல்புகளை உள்ளடக்கி, முன்பகுதி, நடுப்பகுதி, பின்பகுதி ஆகிய தளங்களின் மீது தூரநோக்குப் பண்புக்கமைய வர்ணங்களும் வடிவங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

(10 புள்ளிகள்)

**வினா 2**

1. பூங்கலசம், சங்கநிதிகுள்ளவடிவம், பதுமநிதிகுள்ளவடிவம், நாகபாம்பு, நாகராஜவடிவம்

(4 புள்ளிகள்)

2.
   - கலை நுணுக்கம் மிக்க செதுக்கல்
   - மத்தியில் திரிபங்கநிலையில் நாகராஜ வடிவம்.
   - தலையின் பின்புறம் நாகவடிவம்.
   - கால்புறத்தேகுள்ள/வாமனவடிவம்.
   - காவற்தூணில் யானைவடிவம்
   - காவற்சிலையின் மேற்பகுதி அலங்காரத் தன்மை மிக்கதாக காணப்படுகிறது. (06 புள்ளிகள்)
3.
   - சந்திரவட்டக்கல்லானது காலத்திற்கு காலம் மாற்றங்களுக்கு உள்ளானது.
   - பொலநறுவைக்கால சந்திரவட்டக்கல் அரைவட்டவடிவத்தில் இருந்து அதன் முன்பகுதி சற்று நீளமானதாக காட்டப்பட்டுள்ளது.
   - விலங்குகள் தனித்தனி வரிசையாக மாற்றப்பட்டதோடு அசைவுத்தன்மை அற்ற விதத்தில் காணப்படுகிறது எருது உருவம் நீக்கப்பட்டுள்ளது.
   - வரிசை ஒழுங்குகளும் மாற்றப்பட்டுள்ளது.
   - கண்டிய காலத்தில் பல்வேறு வடிவங்களில் சந்திரவட்டக்கல் ஆக்கப்பட்டுள்ளதோடு விலங்கு வடிவங்களுக்கு பதிலாக கொடியிலை வடிவம் முதன்மை பெறுகின்றது.

(10 புள்ளிகள்)

**வினா 3**

1) பில்லாவ,தந்திரிமலை,தொறவக்க,வெட்டம்புகல, (4 புள்ளிகள்)

2) பொழுது போக்கு
வேட்டை கிடைக்கும் என்ற நம்பிக்கை (மாயவித்தை)
முதாதயர்களை நினைவுபடுத்த
வேட்டையில் இலகுபடுத்த (6புள்ளிகள்)

3)
- ஐரோப்பிய வரலாற்றிக்கு முற்பட்ட குகையோவியங்கள் இலங்கை வரலாற்றிக்கு முற்பட்ட கால ஓவியங்களை காட்டிலும் தரமானதாக காணப்படுகின்றது.
- இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் கோட்டோவியங்களையும், குறியீட்டுத் தன்மை கொண்டதாகவும் காணப்படுகிறது சில ஓவியங்கள் இனங்காணுவதுகடினமாக உள்ளது.
- ஐரோப்பிய வரலாற்றக்கு முற்பட்ட ஓவியங்கள் தெளிவானதாகவும், பிரமாண்டமாதாகவும் முப்பரிமாணமாக நிறந்தீட்டியவித்திலும் காணப்படுகிறது. அசைவு இயல்புத் தன்மை என்பன சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. (10 புள்ளிகள்)

**வினா 4**

1. செம்மணற்கல், சாம்பல் நிறக்கல், சுண்ணக்கல்,வெண்கலம் (4 புள்ளிகள்)
2. முத்திரை பயன்படுத்திய நோக்கம்
   - முத்திரைகளை தயாரித்தல் சிந்துவெளி மக்களின் அன்றாடக் கைத்தொழிலாக இருந்தது.
   - இவை ‘‘பாஸ்’’ஆகப் பயன்படுத்துவற்கு தயாரிக்கப்பட்டு இருக்கலாம் என கருதப்படுகின்றது.
   - போர் வீரர்களுக்கு,முதன்மை பெற்ற குடும்பத்தவர்களுக்கு, பூசகர்களுக்கு ,சாதாரண மக்களுக்கு அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்தும் பொருட்டு இந்த முத்திரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
   - இந்த நாகரீகத்துக்குரிய வியாபாரத் துறைகளை இனங்காண்பதன் பொருட்டும் இவை போன்ற முத்திரைகள் பயன்படுத்தப்பட்ட தெனவும். எழுத்துக்களால் அந்த வியாபாரத் துறைகளை, இனங்கண்டு கொள்ள முடியும் எனவும் ‘‘பசாம்’’குறிப்பிடுகின்றார். (6 புள்ளிகள்)
3. நடனப்பெண் வடிவத்தில் அழகியப் பண்புகள் குறிப்பிட வேண்டும்.
   - கலைவிமர்சகர்களின் அவதானத்திற்கு உட்பட்ட ஆக்கங்களிடையே ஹரப்பாவில் இருந்து கிடைக்கப்பெற்ற வெண்கலத்தினால் நிர்மாணிக்கப்பட்ட நடனமாதின் உருவச் சிலை பிரதான இடத்தைப் பெறுகின்றது.
   - அன்று சிந்து வெளி நாகரீகவாசிகள் உலோக வார்ப்புத் தொழில் நுட்பத் திறன் பெற்று இருந்ததற்கு வெண்கலத்தில் நிர்மாணிக்கப்பட்ட நடனமாதின் வடிவம் சிறந்த ஒரு சாட்சியாக அமைகிறது. உலோகவார்ப்பு முறையில் முழுப்படைப்பாக ஆக்கப்பட்டுள்ள
   - இதன் உயரம் 4 ½அங்குலமாகும். பெண் உடலின் நளினத் தன்மை சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது .பாதி மூடிய கண்கள், கோபம் கொண்ட உடல்நிலையில் நின்று கொண்டு ஒரு கையை இடையின் மீது வைத்து, மறு கை சிறிது மடக்கி காலின் மீது வைக்கப்பட்டுள்ளது. மெலிந்த உடல்வாகுடன் நிர்வாணமாக அமைக்கப்பட்ட இப்பெண் உருவச் சிலையானது மிகுந்தகலைச் சிறப்புடையதாகும்.
   - கழுத்தில் மாலை ஒன்றும், இருகைகளிலும் நிறைந்த வளையல்களும் அணியப்பட்டுள்ளதால் அக் காலத்தில் ஆபரணங்கள் அணிந்தமைக்குச் சிறந்த சான்றாகும். இவ்வுருவம் பிற்கால இந்தியாவில் காணப்பட்ட ஆலயத்தில் நடனமாடும் பெண்ணைக் நினைவுபடுத்துவதாகவுள்ளதெனக் கருதப்படுகிறது. தற்போது புதுடில்லியில் உள்ள தேசிய தொல்பொருட்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

   (10 புள்ளிகள்)